MC.11/2024

02 .09.2025

PW2– முனிசாமி த/பெ.சாமிகண்ணு, வயது–57

எதிர்மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 03.30 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 03.50 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathu in accordance with the provision of Act X of 1873 of the day of 16.09.2025

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

மனுதாரரின் தந்தை உங்களுக்கு நண்பர் மற்றும் தூரத்து உறவு என்றால் சரிதான். எதிர் மனுதாரருக்கு ஒன்றரை ஏக்கர் நிலம், மோல்டிங் வீடு, பால் மாடுகள் மற்றும் எதிர்மனுதாரர் மாடு வியாபாரம் செய்து வருகிறார் என்ற விவரம் மனுதாரரின் தந்தை சொல்லித்தான் உங்களுக்கு தெரியும் என்றால் எனக்கு நேரடியாகவே தெரியும். எப்படி உங்களுக்கு நேரடியாக தெரியும் என்று சொல்ல வருகிறீர்கள் என்றால் எதிர்மனுதாரர் வீட்டிற்கு நான் சென்று உள்ளேன் மூன்று வருடத்திற்கு முன்னரே மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் வழக்கு இருந்ததை திரும்பப் பெற்றுக் கொண்டு மீண்டும் சேர்ந்தவர்களை நான் தான் மனுதாரரை கொண்டு போய் எதிர் மனுதாரர் வீட்டுக்கு விட்டு விட்டு வந்தேன். M.C.No.17/2020. குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, திருப்பத்தூர் என்பதைப் பற்றி தான் நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்று சொன்னால் எனக்கு வழக்கு எண் ஞாபகம்

இல்லை. இரு தரப்பினர்களும் சமாதானமாகி ஒன்றாக வாழ்ந்து வந்தனர் என்றால் சரிதான் . அவ்வாறு சமாதானமாகி சென்றவர்கள் இரண்டு மாதம் மட்டுமே வாழ்ந்தார்கள் என்று சொன்னால் ஒரு வருடம் வாழ்ந்தார்கள். மனுதாரருடைய சகோதரர் மற்றும் மனுதாரரின் தந்தை, தாய் ஆகியோர் எதிர்மனுதாரர் வீட்டுக்கு சென்று எதிர்மனுதாரிடம் சண்டையிட்டு மனுதாரர் தன்னுடைய மகள்களுக்காக சேர்த்து வைத்திருந்த 13 சவரன் நகைகளை எடுத்து சென்றார்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் அது பொய்யான சங்கதி ஆகும். நீங்கள் உங்கள் முதல் விசாரணையில் சொல்லி உள்ள சங்கதியை தான் மனுதாரர் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லப்பட்டுள்ளது எனவும் சொன்னால் சரியல்ல. எதிர் மனுதாரர் இடம் தான் இரண்டு மகள்களும் வாழ்ந்து வருகிறார்கள் எனவும் அவர்களுடைய கல்வி செலவினங்களை எதிர்மனுதாரர் பார்த்து வந்தார் என்று சொன்னால் தவறான சங்கதி ஆகும். மகள்கள் இருவரும் ஓசூரில் வேலை செய்கிறார்கள். மனுதாரர் கார்மெண்ட்ஸ் வேலை செய்த மாதம் ரூபாய் 25000 சம்பாதித்து வருகிறார் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரரின் தாய் தந்தை தான் மனுதாரரை காப்பாற்றி வருகிறார்கள். மனுதாரர் என்ன செய்கிறார் என்ற விவரம் உங்களுக்கு தெரியவில்லை எதிர்மனுதாரர் செய்து வரும் விவரம் மட்டும் தெரியுமா என்றால் எனக்கு தெரிந்த விவரத்தை தான் சாட்சியம் அளிக்கிறேன். மனுதாரர் குடும்பத்தில் உங்கள் மூலமாக காப்பீடு எடுத்துள்ளார்கள் என்று சொன்னால் மனுதாரரின் தம்பி குழந்தைக்கு இரண்டு காப்பீடு எடுத்துள்ளார்கள். மனுதாரர் உங்களிடம் காப்பீடு ஏதேனும் எடுத்து உள்ளாரா

என்றால் இல்லை. மனுதாரர் குடும்பத்தில் உள்ள விவரங்கள் முழுவதும் உங்களுக்கு காப்பீடு எடுத்தது மூலமாகத்தான் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு மனுதாரர் குடும்பம் நீண்ட வருடங்களாக பழக்கம். உங்களுக்கு மனுதாரர் குடும்பத்தை பற்றி எதுவும் தெரியாது எனவும் தவறான சங்கதியை சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur

Chief Judicial Magistrate,
Tirupathur.